# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 115/2023**

**Prosecution witness : அ.சா. 37** **Date : 11.07.2025.**

| Name : வைத்தியலிங்கம் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் மேச்சேரியில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 05.09.2016ம் தேதியன்று விநாயகர் சிலை கரைப்பதற்காக காலை 10.00 மணிக்கு பிக்கப் வாகனத்தில் நான் மற்றும் நண்பர்களுடன் கூணாண்டியூரில் உள்ள ஆற்றில் கரைப்பதற்காக சென்று விநாயகர் சிலையை கரைத்துவிட்டு பிறகு திரும்ப வரும் வழியில் மாலை 4.30 மணிக்கு கூணாண்டியூர் டூ மல்லிகுந்தம் சாலையில் உப்புபள்ளம் அருகே வந்த போது வாகனத்தை ஓட்டியவர் வேகமாக ஓட்டிச் சென்று வண்டியை சாய்த்து விட்டார்.

2) உப்புபள்ளம் மேட்டில் வாகனம் இடது புறமாக சாலையில் விழுந்துவிட்டது. அதில் பயணம் செய்த நபர்களுக்கு காயம் ஏற்பட்டதாக சொன்னார்கள். எனக்கு முதுகு, கை, கால் ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டு ஆம்புலன்ஸ் மூலமாக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தார்கள். நான் பிக்கப் வேனில் பின்னால் உள்ள பாடியில் அமர்ந்து பயணம் செய்தேன். இந்த விபத்தின் காரணமாக இருவர் இறந்து போனார்கள். ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) விபத்தின் போது பிக்கப் வேனில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமாராக 15 நபர்கள் இருந்தார்கள். அதிகமான நபர்களை ஏற்றக்கூடாது என்று ஓட்டுநர் ஆட்சேபித்தார் என்றால் சரிதான். விநாயகர் சிலையை கலைக்க செல்லும் போது மேள தாளத்துடன் சென்றோமா என்றால் இல்லை. வண்டியின் பின்பக்கம் நாங்கள் நின்றிருந்தோம் என்றால் அனைவரும் உட்கார்ந்திருந்தோம்.

4) உட்கார்ந்து பயணம் செய்ததால் வாகனம் சென்ற பாதையை கவனிக்க வழியில்லை என்றால் ஆமாம். டிரைவருக்கு அருகில் யார் யார் உட்கார்ந்திருந்தார்கள் என்றால் அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. ஓட்டுநர் யார் என்பதும் எனக்கு தெரியாது. விபத்து எதனால் நடந்தது என்று என்னால் சரியாக சொல்ல முடியாது என்றால் ஆமாம். ஆனால் விபத்து நடந்த இடம் தெரியும். விபத்துக்குள்ளான வாகன பதிவெண் தெரியாது.

5) யார் யாரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்ற விவரம் தெரியாது. காவல் நிலையத்தில் வைத்து தான் என்னிடம் வாக்குமூலம் பெற்றார்களா என்றால் மருத்துவமனையில் தான் வாக்குமூலத்தை வாங்கினார்கள். நான் சிகிச்சை பெற்றவுடனே வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வந்தேன் என்றால் ஆமாம். எனக்கு பட்ட காயம் சிறுகாயம் என்றால் ஆமாம். அதிக பாரம் ஏற்றி வந்ததால் தான் நிலைதடுமாறி விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.